485

இடைக்கால சர்க்கார் நீடிக்குமா?

V2
76935

டித மு. இராமலிங்கம்

சாலை : கனி 1

தமிழ்ச்சோலை : பதிப்பகம்.

மானேஜர் : திரு. ஜெகநாதன்.

அமைப்பாளர் : திரு. செல்லையா.

ஆசிரியர் : பண்டித முரா.

ட்ராட்ஸ்கியின்

ஜீவிய சரித்திரம் : உலகப் புரட்சி வீரர் வாழ்வின் அரிய பகுதிகள், புதிய உலக அமைப்பின் அஸ்திவார இரகசியங்களடங்கியது.

தமிழ்க்கோயில் — பதிப்பகம்.

தமிழர் மன்றம் — அறிஞர் நிலையம்.

தமிழ்க்கலைக் கழகம்—Tamil Art circle

தமிழ் ராயல் காலேஜ்–Tamil Royal College

தமிழர் காங்கிரஸ்—Tamils' Congress.

அமைப்பாளர் : பண்டித முரா, மதுரை.

488

இடைக்கால சர்க்கார் நீடிக்குமா?

(நிலைத்தற்குரிய அரிய குறிப்புகள்)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
20 DEC 1946
MADRAS

ஆக்கியோன் :

பண்டித முரா, மதுரை.

தமிழ்ச்சோலை :

ஷெனாய் நகர், மதுரை.

பதிப்புரிமை] **1946** [மதிப்பு 6 அணா

உரிமையுரை

மன்னும் தமிழகத்தில்
வாழும் மனிதரெலாம்
உன்னும் உலகம் உயரவை
அன்னை என்
அன்னை அ[illegible]காமும்
அத்தன்முத் தையாவும்
நன்னர் வழங்கியதால் நல்கு.

தமிழ்க்கோவில்,
மதுரை.
7—12—'46.

பண்டித முரா.

வாழ்த்தியல்

(I) **மாணிக்கம்** : புறநிலை.

அது பழச்சுவை என
அமுது என அறிதற்கு
அரிது என எளிது என
அமரரும் அறியார்!

(II) **மணி** : வாயுறை.

பல்லுயிரும் பல உலகும்
படைத் தளித்துத் துடைக்கினுமோர்
எல்லை யறு பரம்பொருள் முன்
இருந்தபடி இரு **தமிழே**!

(III) **நாடு** : செவியுறை.

செந்தமிழ்க் கப்பல்
திரைகடல் எங்கும்
செலுத்திய திருநாடே—இதை
எந்தாய் நாடிது எந்தாய் நாடிது
என்று வணங்குவமே!

(IV) **உலகு** : அவையடக்கம்.

"செயற்கை யறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கையறிந்து செயல்"—திருக்குறள்.

முன்னுரை.

இடைக்கால சர்க்கார் நீடிக்குமா ? என்ற கேள்வி சந்தர்ப்பம் நோக்கி மூன்று பொருளில் இங்கே எடுத்தாளப் படுகின்றது :

1. அரசியல் நிர்ணயசபை வெற்றியடைந்து இந்தியர் காரியத்தை நிறைவேற்றும் வரையில் இடைக்கால சர்க்கார் நீடிக்குமா!

2. ஆங்கிலேயர் அரசியல் நிலைமை செம்மைப்படும் வரையில் இடைக்கால சர்க்கார் நீடிக்குமா? இங்கே இடைக்கால் ஏற்பாடு!

3. இந்தியர் எதற்கும் தயாராகிற வரையில் இடைக்கால சர்க்கார் நீடிக்குமா?

இம்மூன்றுடனும் பொருந்தியுணரும் பதிலே முழுப் பதில்! அதற்குரிய குறிப்புகளை முறைப்படுத்தி உணர உதவவே இச்சுவடி!

ஒரே கேள்வி பல பொருள் தருவது எப்படி என்று சிலர் கேட்கலாம். தொடர் தனியே பொருளற்றது. சந்தர்ப்பம்தான் பொருள் தரும்.

'என் போர்' என்பது இதோ மூன்று பொருள் தருவதைக் கவனியுங்கள் :

'தாம் தமிழர் என்போரின்
என்போர்க்கு தாரணியில்
ஆம் தமிழர் ஆக்குவதென் போர்'.

ஒரு சொல்லும் இதனை உணர்த்தும் :

நேரு கடுநேராய் நேரல் எதிரிகள் தாம்
கோரும் பயன் தருமால் கொண்டு !
விளங்கா விடின் விழியேல்! வீறுள் விழிகொள் !
களங்கம் விழிப்பால் அறும் !

இடைக்கால சர்க்கார் நீடிக்குமா?

I. விளையாட்டு

'இமயமலையைச் சுமப்பது என்ன பிரமாதம்! என்னிடம் தந்தால், நான் அதை வைத்துக்கொண்டு பந்தாடுவேன்!' என்கிறான் ஒருவன்.

'எங்களிடம் அதை இரண்டு துண்டாக்கித் தந்தால் நாங்கள் இருவரும் வைத்துக் கொண்டு நன்கு குண்டு விளையாடுவோம்!' என்கிறான் இன்னொருவன்.

'அடே தம்பிகளா, அது பந்துமில்லை, குண்டுமில்லை: பொறிவிளங்காய் உருண்டை! அதுவும் உங்க அம்மா செய்ததுதான். சேர்ந்து வாருங்கள் தருகிறேன்!' என்கிறான் வேறொருவன்.

'அட அசடே! அவர்களிடம் காட்டாதே அதை! பசியுடன் சுற்றி நிற்கும் சிறுவர்கள் பறித்துக் கொள்வார்கள்!' என்கிறான் பிறிதொருவன்.

இந்த விளையாட்டைப் பார்த்துக்கொண்டு நிற்பவர்கள் பலர் ஆச்சரியப் படுகிறார்கள், சிலர் ஆத்திரப் படுகிறார்கள்; வேறு சிலர் நால்வரையும் ஏமாற்றச் சூழ்ச்சி செய்கிறார்கள்: மற்றவர்கள் பரிகசிக்கிறார்; நகைக்கிறார்கள்.

இதுதான் இன்றைய இந்திய இடைக்கால சர்க்காரின் நிலை! 'இது நீடிக்குமா?, என்று பின்னல் நின்று ஒருவன் கேள்வி போடுகிறான்.

'பொறுதம்பி! எது நீடிக்குமா என்று கேட்கிறாய்? பந்தாடுவதா? துண்டாடுவதா? குண்டாடுவதா? பசியாறுவதா? எது நிலைக்க வேண்டும்'? என்று நாம் கேட்கிறோம்.

கேட்ட சிறுவன் திகைப்படைகிறான்! மௌன விரதம் தொடங்குகிறான்! இனி உண்ணா விரதம் கூட ஆரம்பித்து விடுவான் போலிருக்கிறது!

அதற்குள் அவனுக்கு விடை சொல்லாமல் போனால், அப்புறம் வங்காள லங்கணம், நவகாளி நர்த்தனம்! பீகாரின் பெருங் காற்று, எல்லைப்புறத் தொல்லை எல்லாம் தொடர்ந்தாலும் தொடரும்! அவை எங்கும் பரவி விடுவதற்கு முன் சிறுவன் சத்தியாக்கிரகத்தை நாம் பெரும் பிரச்சினையாகக் கவனித்தாக வேண்டும். ஏதாவது ஓரளவு தகுந்த பதில் சொன்னால் தான் விடுவான் போலிருக்கிறது.

அத்துடன் அதை அனைவரும் அறிந்து ஆவன செய்ய ஆயத்தமாகத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். அ. நி. சபையும் அதற்காகத் தான் கூடப்போகிறது!

நம்மால் இயன்றதை நாமும் செய்யத் தவறக் கூடாது என்பதற்காகவே இந்தச் சுவடியை இப்பொழுது அவசர அவசரமாக எழுதி வெளியிடுகிறோம்!

நாடு எப்படியாவது விழிப்படைந்து நல்வழியில் நடக்க ஆரம்பிக்குமானால் அதுவே நாம் விரும்பும் கைம்மாருகும்.

'நமக்கெல்லாம் நாட்டுரிமை வந்ததென்கிறார்கள்
'நமை வீழ்த்த நமக்குரிமை!' என்பததன்
பொருளாம்!''—''தமிழ் முரசு''.

II. விளக்கம்.

'உடல் வேறு தலை வேறு கால் வேறதாக்கி
உளம் வேறு படுதற்குச் சதி செய்து வைத்தார்
கடல் போன்ற தமிழ் வீரர் கூட்டத்தை **இன்றும்**
கரை போட்டுத் தடை செய்ய யார்க்கென்ன உரிமை?''
—'குயிலன்'.

'பிரிவினையே விடுதலைக்கு வழி' என்கிறார் ஜனுப் ஜின்ஞ. 'எந்த கட்சியிடமும் உங்களை ஒப்படைத்துக் கை விடமாட்டோம்!' என்கிறார் வேவல் பிரபு எல்லைப் புறத்தாரிடம்!.

'இந்தியாவை ஒரே நாடாக்க உயிரையும் தருவோம்!' என்கிறார் காங்கிரஸ் தலைவர். 'அதற்காகவே நாங்கள் உரிமையைப் பெறுவோம்!' என்கிறார் லீக் தளபதி.

'இந்த இடைக்கால ஏற்பாடு (சர்க்கார்!) ஒரு மந்திரி சபையுமில்லை; கூட்டு மந்திரி சபையுமில்லை; 1919-ம்

ஆண்டு இந்திய அரசியல் சட்டப்படி அமைத்த சாட்சாத் வைஸ்ராய் நிர்வாக சபையேதான்!' என்கிறார் ஜின்னா!.

'பல கட்சிகளை உடைய சர்வாதிகாரம் உள்ள பாராளும் மன்றம் இருந்தால்தான் கூட்டு மந்திரி சபை அமைக்க முடியும்!' 'இன்றைய நிலையில் வேவல் பிரபுதான் துணைத்தலைவரை அமைக்கவேண்டும்' என்றும் விளக்கம் தருகிறார் லீக் தலைவர்'.

அவர் மேலும், 'இந்த இடைக்கால ஏற்பாட்டை நான் அங்கீகரிக்கவே மாட்டேன்! லீக் கவுன்சிலையும் கூட்ட மாட்டேன்! லீக் மெம்பர்கள் 'காவலாளிகளாகவே இருக்கிறார்கள்' என்று விளாசுகிறார்

முன்போலவே ஜனாப் ஜின்னா கூறியதைப் புறக்கணிக்கும் நாடகம் வெற்றிகரமாக நடிக்கப் பட்டு முதற் பரிசு பெற (பத்திரிக்கைகளிடம்!) வேவல் பிரபுவும் முன்வந்து நிற்கிறார்.

அரசியல் நிர்ணய சபை 9—12—46-ல் கூட போகிற தென்ற அறிக்கையும் அழைப்புகளும் பறக்கின்றன! சட்ட சபையில் நவகாளி பீகார் சண்டமாருதம் கிளம்புகிறது! சர்ச்சிலும் ஆனந்தக்கண்ணீர் சொரிகிறார்!.

அ. நி. சபை தாமதம் ஆங்கிலேயருக்கு நல்லதா? கெட்டதா? என்ற பிரச்சினை எழுகிறது. இமயமலை சுமக்கும்

திருவிளையாடலுடன் கலவரம் பெருக்கும் தகராறும் இங்கே எழலாம். சிறிது கவனித்தால் விளக்கம் பெறலாம்!

இமயமலை ஒருவனால் தூக்கி இன்னொருவனுக்குத் தரப்பெறும் பொருளில்லை! அது போல்தான் சுதந்திரமும்! இது முதலில் இருவருக்கும் விளங்கவில்லை. அடுத்த இருவர் நன்கு அறிவர் அதனால்தான் சூழ்ச்சியிலும் வெற்றி பெறுகின்றனர்: 'வானத்தன்ன சூழ்ச்சி!' முன் போபால் நவாப் அப்பம் பிரிக்கும் செப்பமான வேலையில் ஈடுபட்டார் இனி அவ்வேலையை பெடறல் கோர்ட் செய்யலாம். வெற்றி?

வெற்றி சூழ்ச்சியின் மாட்சியுடையவர்களுக்குத்தான். அதில் என்ன சந்தேகம் காஷ்மீரத்தில் கடிந்து குதிப்பதும், வேவல் பிரபுவை வெறிக்கப் பார்ப்பதும் சூழ்ச்சியாகுமா? இந்துக்களுக்கே ஜே போடுவதும், தமிழர்களைத் தாக்குவதும், வங்காளியை வாட்டுவதும், ராம ராஜ்யமென்பதும், இந்தியை சுமத்துவதும் இந்திய ஒற்றுமை உருவாக்க வழியாகுமா ?

'தொழுதகையுள்ளும் படையொடுங்கும்
ஒன்னார் அழுத கண்ணீரு மனைத்து'

என்ற பொய்யாமொழியை மறந்து உய்யாதொழிந்தோர் எண்ணிறந்தோர் பகைவனை வெல்லவேண்டும்! நகைப் பரிசு

நமக்கு எதற்கு? இதுவே தலைமையின் நிலைமை இதை பொறுத்துத்தான் இடைக்கால சர்க்கார் நீடிப்பதும் நீடிக்காததும் நினைவு கூறத்தக்கது.

III அரசாட்சி

'தமிழ் நாடு ஒரு நாடு, தனி நாடு, யார்க்கும்
தலை தாழ்த்த வேண்டாத புது நாடதாகி
அமிழ்தான தமிழாலே அரசாட்சி செய்யும்
அது மிக்க தூரத்தில் இலை இன்று கண்டோம்'

—'குயிலன்'

"இது என்ன இது! அவன் கிடக்கிறான் குடிகாரப் பயல், எனக்கு போடு இரண்டு பெட்டி! என்பது மாதிரி இருக்கிறதே! தமிழ் ஸ்தான் எழுகிறதா?" என்று சில நண்பர்கள் எண்ணுகிறார்கள் என உணர்கிறோம்!

நாம் அவர்களுக்கு ஒரு பெரியார்—ஆம், ஒப்பற்ற உலகப் பெரியார் சன்யாட்சன் கூறியிருக்கும் ஒரு கதை இன்று தர விரும்புகிறோம்.

'உலகம் ஒன்று' என்ற வில்க்கி புத்தகமும் 'முதல்' என்ற மார்க்சும் படித்தவர்கள் கூறுகிய தத்துவத்தைப் பிரசாரம் பண்ண மாட்டார்கள் என்பதையும், நிலையற்ற திரிசங்கு சுவர்க்க வாசிகளாக நாமிருக்கத் தேவையில்லை

என்பதையும் முதலில் அவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொண்டு இக்கதையைக் கவனிக்கவேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறோம்:

ஆங்காங் நகரத்திலே ஒரு கூலியாள் இருந்தான். அவன் தோளில் மூங்கில் தடி ஒன்றின் இரு முனைகளிலும் மூட்டைகளைக் கட்டித் தூக்கிக்கொண்டு போவது வழக்கம் நிலையான இடமில்லாததால்! ஒரு நாள் அவன் தன் இடமிருந்த ஒரு சிறு தொகையைக் கொடுத்து லாட்டரி சீட்டு ஒன்றை வாங்கினான்! அதைப் பத்திரமாக வைத்திருக்க வேறு இடமில்லை: அந்த மூங்கித் தடிக்குள் சுருட்டி வைத்திருந்தான். லாட்டரி குலுக்கும்போது முதல் பரிசு லட்சம் டாலர் அவன் சீட்டில் இருந்த எண்ணிற்கே விழுந்தது. "அவன் சீட்டை மெதுவாக வெளியே எடுத்துக்கொண்டு போய் கொடுத்து விட்டுப் பணத்தைப் பெற்றான்." பின் தடியைக் கடலில் எறிந்து விட்டு மாளிகையில் வாழ ஆரம்பித்தான்! "அத்தடிதான் தேசியம்! அந்த மாளிகை வாழ்வுதான் சர்வ தேசியம்! பெரிய லாபம் கிடைக்காவிட்டாலும் அத்தடி முன் போல மூட்டை சுமக்கவாவது தவறுது இல்லையா?"

இதிலிருந்து பெரிய ஊழியம்தான் வேண்டும்! முதலில்லா வணிகமே வணிகம்! சிறு துரும்பும் எதற்கு? என்னும் பொது நோக்க வாதிகளைக் கண்டு உலகமும் அன்னார் உள்ளமும் ஒருங்கே சிரிக்கும்.

(a) "ஆகவே சமரசத்தின் மூலம் வெள்ளைக்காரரை இந்தியாவிலிருந்து வெளியேற்றி விடலாம் என்ற நம்பிக்கையை காங்கிரஸ் கைவிடவேண்டும்''.

(b) "மற்றும் அகண்ட இந்துஸ்தான், பாகிஸ்தான் ஆகிய இரண்டு திட்டங்களையும் தீயிலிட்டுப் பொசுக்கிச் சுதந்திர இந்தியாவில் எல்லாத் தேசீய இனங்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு என்ற பிரகடனத்தை வெளியிடவேண்டும்''.

(c) "மத ஸ்தாபனங்களுடன் சமரசம் பேசுவதும், மக்கள் உரிமையை நசுக்கும் சமஸ்தான மன்னர்களை மத்தியஸ்தர்களாகக் கொள்வதும் நிறுத்தப்பட வேண்டும்''

—தமிழ் முரசு

மேலே குறித்த அன்பர் திரு ம. பொ. சிவஞான கிராமணியார் கருத்தைத் தமிழகம் நன்கு அறியும். அத்துடன் இந்தி வதந்தியும், இந்துமத வெறியும் ஒருங்கே ஒழிய வேண்டும்! மற்ற மதங்களும் மடங்கிவிடும்!

காட்டுமிராண்டிகள் காலத்தில் மதப்போர் நடந்ததென்று சரித்திரம் சொல்லுகிறது. இன்று நாம் கண் கூடாகக்காண்கிறோம். மகாத்மாவின் யாத்திரையும், பிளவும் அரசியல் அரங்கத்தில் அன்னியருக்கு மிக இடங் கொடுப்பனவாக அமைகின்றன. இன்று இந்தியாவில்

முகமதிய மதமட்டுமில்லை. கிறிஸ்தவ மதம் நிலைத்துள்ளது. புத்தமதம் பொருந்தியிருக்கிறது. சமண மதம் தங்கி இருக்கிறது. மெய்கண்டார் கொள்கையும் வேரூன்றி யுள்ளது.

'காந்தி காட்டும் பாதையில் 18 பகுதிகள் உள்ளன. அவை: வகுப்பு (இந்து-முஸ்லீம்) ஒற்றுமை, தீண்டாமை ஒழித்தல், மதுவிலக்கு, கதர், ஊர்க்கைத் தொழில், ஊரின்படிப்படை, அடிப்படைக்கல்வி, முதியோர் கல்வி, மாதர் முன்னேற்றம், பசுக்காத்தல், தாய்மொழி, நாட்டுமொழி, (இந்தி), பொருள் வளம், வேளாளர், தொழிலாளர், பழங்குடி, குட்ட மொழிப்பு, மாணவர் என்பனவாம். இவை பொதுமக்களை நோக்கி யமைந்தனவாம்

இதற்கு எதிர்த்திசையில் செல்லுகிறது ஜின்னு காட்டும் பாதை. அது 14 பகுதிகள் உள்ளன. அவை: இந்தியக் கூட்டரசு, விடுதலையுற்ற மொழிவாரி மண்டலங்கள். சிறுபான்மையோர் பயன்பெறும் பங்கு, $\frac{1}{3}$ இடம் முகமதியர்க்கு தனித்தேர்வுகள், அமைதியான மண்டலப் பிரிவு, மதவிடுதலை, பாதிக்கப்படுவோரில் $\frac{3}{4}$ பங்கின் எதிர்ப்பு நிலைத்தல், சிந்து பிரித்தல், எல்லா மண்டலங்களிலும் சம திருத்தம், முகமதியராளுமமைப்பு, கல்வியுரிமை, சூழ்வினைக் குழுவில் $\frac{1}{3}$ முகமதியர், எல்லா மண்டலங்களும் ஒப்பாத மாற்றமின்மை: பல தீர்ந்தன. ஆனால் முழு சிக்கலும் தீரவில்லை!

வள்ளுவர் வகுத்தவழி பொதுவானது :
'சமயக்கணக்கர் மதிவழி கூறாது, உலகியல் கூறிப்பொருள் இது' என்பது.

"பொருள் அல்ல வரைப்
பொருளாகச் செய்யும்
பொருளல்லதில்லை
பொருள்"—திருக்குறள்.

மதிப்பற்ற எதற்கும் மதிப்பு உண்டாக்குவதே உண்மையான ஆக்கவேலை என்பதை யாரும் மறுக்க இயலாது.

கண்ணோட்டம் என்ற பகுதியில் உலகு, இயல்பு' பண்பாடு, கண்ணியல், அழகியல், இயைபு, உடையார், ஆள்வினை, ஒறுத்தாற்றல், நாகரீகம் இவைகளே வள்ளுவர் வகுத்த வழிதரும்.

'உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்'—திருக்குறள்.

உலக நிலையை உற்று நோக்கி அதற்கு ஏற்ற உயர்வழியில் தன்னையும் இனத்தையும் நாட்டையும் நடத்த வல்லவர்களே உலகத் தலைவர்களாவர். இதில் எத்துணையும் ஐயமில்லை!

அப்பத்தின் இரண்டு துண்டுகளையும் தின்றுவாதி பிரதிவாதிகளையும் தின்னப் பாய்ந்த நியாயாதிபதி

போலவே பிரிட்டனுக்குச் சர்வதேச சபையிலும் உள்நாட்டு அவையிலும் உயர்வு கிடைத்திருக்கிறது. பீகாரும் வங்காளியும் இந்தியர் ஆட்சித் திறத்திற்குரிய சாட்சி தரப் போதியனவென்பார்.

இந்திய இடைக்கால சர்க்கார் நிலைக்க வேண்டுமானால் திரு. ம. பொ. சிவஞான கிராமணியவர்கள் குறிப்பிடுவதுபோல், பொது உடமை வாதிகள் கூறுவதுபோல் சுய நிர்ணய உரிமைப் பிரகடனம் மட்டும் போதுமா? வெள்ளையர்க்கு 'அல்டி மேட்டம்' தரும் நாடகம் மட்டும் பொருந்துமா? அதற்குரிய அடிப்படை ஒன்றும் வேண்டாமா?

(a) விடுதலை ஒன்றே நோக்கமாக உடைய மந்திரிகளை மாகாணங்களில் அமைக்கவேண்டும்.

(b) தேசிய ராணுவத்தையும், போலீஸ் படைகளையும் இணைக்கவேண்டும்.

(c) கல்வி போதிப்பது பெரும் நோக்கத்தோடு அரசாங்கமே செய்யவேண்டும்.

(d) சமயப்பூசல்களுக்கு எந்த வகையிலும் இடம் தரக்கூடாது. இதுவே இன்றைய அன்னிய தந்திரிகளின் மந்திரக்கோல்.

(e) நீதியையும் நிதியையும் பிரித்து அமைக்க வேண்டும். (லஞ்சம் முதலியவற்றை ஒழிக்க இதுவே வழி.)

(f) மொழிவாரி மாகாண எல்லைகளை பொதுக் கமிட்டியின் உதவிகொண்டு அமைதியாக முடிவு செய்தல் (இது இன்றைய சிக்கல்களை எல்லாம் தீர்க்கும் சர்வ சஞ்சீவி.)

(g) மக்கள் திரிபுணர்ச்சி கொள்ளச்செய்யும் இந்தி, உருது பிரசாரமும், ஹரிஜன் சிவஜன், ஆரிய, திராவிட இந்து வெறிகளும் தலையெடுக்க விடக்கூடாது.

(h) இன வரம்பும் இணங்கலும் மாசினியின் அரசியல் முறை. இதனையே நாம் மேற்கொள்ள வேண்டும்.

(i) வெட்டும் கட்டும் பிஸ், மார்க்கியன் முறை இது பலராலும் மேற்கொள்ளப்பட்டுத் தோற்றது.

(j) இப்போது 'ஐவரை' அழைத்திருப்பது எம் முறை என்று பார்ப்போம். பின்னது தான்!

(k) ஓரளவு இன்று உண்மையான அதிகாரமுடைய மாகாண சர்க்கார்களும் ஒத்துழைக்க முழுமனதோடு முன்வரவேண்டும்!

(l) டாக்டர் பட்டாபி சீதாராமையா வெளியிட்ட பிரமிடல் இந்திய அமைப்புக்குரிய பூர்வாங்க வேலை உடனே நடைபெறவேண்டும்.

(m) இலங்கையுள்பட 16 தேசிய இனங்களுக்கும் சுய நிர்ணய உரிமை வரம்புடன் அருளப்படுமென உடனடியாக மத்திய சர்க்கார் பிரகடனம் செய்யத் தவறினல் புது உலக அமைப்புக்குரிய இன்றியமையாத நல்லரசு ஒன்றை நாம் தமிழகத்தில் நிலைபெறச் செய்ய ஆவன அனைத்தும் செய்வோம்.

இதனை மறுக்கிற குறுக்கே நிற்கிற எதனையும் நொறுக்கிவிடுவோம். தென்னுட்டுக் கூட்டரசில் இலங்கையை இணைத்ததும், பர்மாவையும் எல்லைப்புறத்தையும் கொண்டு வட இந்தியா மடக்கப்பெறும்.

பின்னர் சிங்கப்பூர் முதலிய தீவுகளும், அரபு நாடுகளும் இணங்கிய உடனே ஆஸ்திரேலியாவும் தென் ஆப்பிரிக்காவும் கூட்டப்பெறும். சீனரும், தென்னமெரிக்கரும் ஒத்துழைக்க ஆரம்பித்ததும் ஜப்பானியர் மடங்கி வருவர். முதல் தென் கோளார்த்தம், பின் வட கோளார்த்தம் அவ்வளவுதான்! 'சொல்வது எளிது வெல்வது அரிது' என்று உடனே எண்ணுகிறீர்கள் இல்லையா?

IV. பூவரசு.

நாம் வெளிநாட்டு, மேனாட்டு முதலாளிகளின், வணிகர்களின் சூழ்ச்சியை இந்தியாவில் சிதற அடிக்க வேண்டுமானால் 'உள்ளுவதோரும் உயர்வுள்ளல் மற்றது தள்ளினும் தள்ளாமை நீர்த்து' என்ற பொய்யா மொழியை மறவாமல் துணிவுடன் கடமை செய்து கனிவுடன் முன்னேறுவோம்.

எழுதுகோலும் எழுகலை வாழ்வுறு வாளும் இருகண்களாக நாம் கருதுகிறோம். வல்லரசு என்று நாம் ஏகாதிபத்தியத்தையும் சர்வாதிகாரத்தையும் எண்ணவில்லை. அந்த எண்ணம் தமிழ் மரபுக்கே புறம்பானது. தமிழ் மக்கள் மதித்தது, பொருட்படுத்தியது பொருள் என்றால் அது 'ஒழுக்கம்' என்பதே.

அதனை அகம், புறம், என்று எடுத்துரைப்பர், தமிழ் அறிஞர் அனைவரும். அதனை உணர்ந்த கோமரும் தன் காவியத்தில் இருபெரும் பொருள்களே உலகில் உள்ளன ஒன்றே காதல் போர் இவை நல்லன'

"Two things greater than all things are
One is Love and the other is war"-என்கிறார்.

வேண்டுவது வீர வாழ்க்கையே. வெறும் ஈர வாழ்க்கை ஓர வாழ்க்கையேயாகும். இதற்கு மகாத்மா காந்தியின் வாழ்க்கையே போதிய சான்றாகும். அவருடைய மனத்தூய்மை யாராலும் குறையாக மதிக்கப்படாது. ஆனால்,

தக்க பக்கபலம் இல்லை. ஒரு உண்மை மாணாக்கனைக்கூடக் காண இயலவில்லை. சாக்கிரட்டீசுக்கு பிளாட்டோவும்; பிளாட்டோவுக்கு அரிஸ்டாட்டிலும், அரிஸ்டாட்டிலுக்கு அலெக்சாந்தரும் மாணாக்கர் ஆவர். இன்றைய உலக உயர்வின் பெரும்பாகம் அவர்களுக்குரியதேயாகும்.

அன்பில் மலர்ந்து உயரும் அக ஒழுக்கம்! வீரத்தால் வீறு பெறம்புற ஒழுக்கம்! தன் முயற்சியால் தக, உயர் தலை தமிழ் மரபின் உயிர் நாடியாகும்! தாளாண்மை யாணிவேர்! வேளாண்மை சிகரம்! ஓரை, கூத்து, நடனமிவை பொருநத் தமிழ்க்கலைகள்! இசை தனிக்கலை ஓவியம், இலக்கியம், வடிவமிவை இயற்றமிழ்க்கலைகள். இவை எழுமே தமிழன் எழுகலை; உலகம் உயர்கலை! பொருநம் போரையும் நடிப்பையும் குறிக்கும். அதனுடன் இசைந்து இயல்வளம் பெருக்கவே வாழ்வு, தொழிலழகம், துறையகம் வலியகம், வரையகமிவற்றால் எழவேண்டும். இப்போது இக்கதையை கவனிக்க:— (நாட்டுப் பற்றின் சிகரம்!)

தியாகம்.

காளி கோவில்— சீக்கிய குரு சந்நதியில் நிற்கிறார். சீடர்கள் சூழ்கின்றனர். கண்களில் கனல் வீசும்படி வீர வாளை உயர்த்தி முழங்குகிறார். 'இந்த வாளில் காளி இறங்கியிருக்கிறாள்! இதுவே நம் நாட்டின் விடுதலையை நிலைநாட்டும்! இதற்கு இப்போது ஐவர் பலியாக வேண்டும்! முன் வாருங்கள்!'

ஓரே அமைதி! ஒருவரும் வாய் திறக்கவில்லை! சிலர் அஞ்சி நழுவலாயினர்!

'பேடிகள்! பேடிகளுக்கு வீடேது! விடுதலை ஏது? ஆண்மையற்ற உங்களுக்குக் குருவாக இருப்பதைவிட இதோ நானே பலியாகிறேன்!' என்று வாளை ஓங்கினர். உடனே ஐவர் முன்வந்தனர்! குருவுடன் கோவிலுக்குள் சென்றனர்.

சில விநாடிகள் .....வெட்டும் சத்தம் 5! இரத்தம் தோய்ந்த வாளுடன் குரு வெளியே வந்தார். குருதியுடன் வாளைக்கண்டு நடுங்கி நிற்பவர்களைப் பார்த்து 'ஆண்மை யற்றவர்களுக்கு அறிவேது? நாடேது? வீடேது? இத்தனை பேரில் ஐவர்தான் என் அன்பிற்குரியவர்! அவர்களே தியாகிகள்! உண்மையில் அவர்கள் இறக்கவில்லை! இந்த இரத்தம் ஆட்டு இரத்தமே! என்று குரு அவர்களை வெளியே அழைத்தார்.

அதன்பின்னர் ஒவ்வொரு சீக்கியனும் தேச உணர்ச்சி யும் வீராவேசமும் வரப்பெற்றவனாய்ப் போர் வீரனாக, அனைவரும் சிம்மங்களாகவே மாறினர்.

அதனால்தான் இன்று அவர்களுக்கும் இடைக்கால சர்க்காரில் தன் உரிமையும் உயர்வும் கிடைக்க நேர்ந்தது.

"ஐந்தும் அடக்கு! அடக்கு! என்பார் அறிவிலார்"

—திருமூலர்.

'இம்மையில்-செய்தது மறுமைக்கு ஆகும்' என்னும் 'அறவிலை வாணிகம்' செய்யாமல் 'உலகம் என்பது உயர்ந்தோர் மேலதே!' என்ற உறுதிபற்றி மலர்ந்து உயர்வதுதான் தமிழர் கலை வாழ்வின் மலராகும்! வாழ்வையே நிலைத்து உயர் கலையாகச் செய்த பெருமை தமிழனுக்கே உரியதாகும்! கலையுயர நிலையுயரும்! நிலையுயர நினைவுயரும்! நினைவுயர புனைவுயரும்! புனைவுயர புவியுயருமே!"

'யாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்!'

என்று வாழ்ந்த நாம், இன்று தாழ்ந்து மண் வெட்டிக் கூலி தினல் ஆச்சே எங்கள் வாள் வலியும் தோள்வலியும் போச்சே என சோர்ந்து மயங்குவதேன்?

திறந்த கோட்டை:

கோட்டையைத் திறந்துவிட்டு எதிரி நுழைந்தபின் என் நுழைந்தான் என்று கேட்டு குதிக்கும் ஆராய்ச்சியாளர்களும் உண்டு. மகாத்மாவிடமிருந்த திறவுகோலை ஜின்னா வாங்கிக்கொண்டுபோய்—ஒப்பந்தம் செய்து கொண்ட ஒரு திட்ட உருவத்தில் வேவலிடம் தரும் வரையில் பார்த்துக்கொண்டிருந்தது யார் குற்றம்? வீடு கிடைக்கவே கஷ்டமாக இருக்கும் இந்த காலத்தில் கிடைத்த கோட்டையை விட்டு விட்டு வெளியேற யார் சம்மதிக்க முடியும்? சென்றது செல்லட்டும். இனியாகிலும் விழிப்புடன் இருந்து பழிப்பன தவிர்க்க முடியுமா

என்று பார்ப்போம். ஈரம் என்பது வீரம் வளர் நிலம் நணைந்த இடம் கல்லும் நரிகளிடம் பரிகளை அடகு வைப் பது எங்கேனும் உண்டா? நாடாளச் செல்வோனை காடா ளச்செய்யும் தந்திரம் புதியதா?

சமயப் பூசல் கிளம்ப இடம் தந்து அதை அடக்கு வதிலா நம் அரிய காலம் கழியவேண்டும்.

எணியாம் கல்வியும் (**Science**) காணியால் கலையுமே (**Art**) நம் இருகண்கள் என்பதைத் மறந்தோம்.

'குருடும் குருடும்
குருடாட்டம் ஆடி
குருடும் குருடும்,
குழி விழுமாறே' நாம்

ஏன் பரிதவிக்க வேண்டும்? எல்லைப்புறத்தினர் இன்றைய நிலையை ஏன் கூர்ந்துணர தவறினோம்? சுபாஷ் சந்திர போஸ் உயர்வை உணராமல் அவர் உயிரோடு இல்லை என அறிவிக்கலாமா?

போட்டி கோரிக்கையில் தக்க போட்டியின்றி வெல் லும் லீக் தலைவரின் பண்புணர்ந்து முன்னேற தவறலாமா? மக்கள் கல்வியும் செய்திறனாகிய கலையும் நினைவுதரும் தாய் மொழியும் புனைவுதரும் உலக மொழியிலும் அடைந்து உயர தடை செய்யலாமா?

சர். C. V. ராமன் போன்ற அறிஞர்களைக் கொண்ட ஆலோசனைக் கமிட்டியும், ஆராய்ச்சி கழகமும் நிறுவினால் பத்திரிகைகளும் எழுத்தாளர்களும் ஒத்துழைத்தால் புதிய ஒளியின் (cosmic rays) உதவியால் அணுகுண்டின் ஆற்றலையும் அடக்கி உலக வல்லரசுகளையும் ஒடுக்க முடியும்.

நாம் ஆங்கிலேயரைவிட அதிகத் தொகையினர்; ஐரிஷ் காரரைவிட 14 மடங்கு அதிகம் இருக்கின்றோம்!

தமிழகம் இங்கிலாந்தைவிடப் பெரியது; அயர்லாந்தைவிட 20 மடங்கு பெரியது!

நாமா தனியரசு நடத்தமுடியாத சிறிய நாட்டினர்? எதிரிகளின் சூழ்ச்சியை உதிரச்செய்வோம்!

தமிழர் கொடியைத் தொழுவோம்
தரணி போற்றும் (தமிழர்)

இயல் குறிக்கும் புலியும்
இசை குறிக்கும் வில்லையும்
பொருந்தமிழ் குறிக்கும்
போற்றரும் மீன்படைத்த (தமிழர்)

(1) இளங்கோ தன்னுடைய நாட்டின் அருகிலிருந்த பகைவன் (2) நிலத்தை இசைத்தபின் (3) பொதுவன் நிலம் இணைத்து, (4) நொதுமன் நிலமும் கூட்டலே முதனெறி!

ஈற்றவரிருவருமிலரேல், வேலன் ஒழுக்கமேகருவியாய் அடுத்த பகைவன் குடிகளின் உள்ளங் கவர்ந்து, பின் தூர வைரிகளை நோக்கித் திரும்புவது இரண்டாவது நெறி!

வெலற்குரிய அரசியல் வட்டமிலதேல் நண்பனையோ, நள்ளானையோ தன்படைக்கும் எதிரியல்லது எள்ளாண் படைக்கும் இடையில் சிக்கவைத்து முறையே நெருக்கி வெல்வது மூன்றாவது நெறி!

அன்றெனின், பூவரசன் அருகிலுள்ள வலிய கொடியானை முதலில் அடக்கி, வலி இரட்டித்து, அடுத்த அடையலனை வென்று, ஆற்றன் மும்மடங்காக்கி மூன்றுமவனையும் பிறரையும் முறையே முறியடிப்பது 4-வது நெறி.

மறை, ஒற்று, நட்டல், முற்றல், தாக்கல், இவை ஐம்பொறி என்ப! அறம், பொருள், இன்பம் உயிரச்சம் ஆய் நெறி!

'The highest is not to be seen by the body's eye!
The mind's eye is to be kept open and fixed!
Then the seeming nature will certainly go off!
For this His sweet Feet's cool shade say 5 letters!'

மெய்கண்டார்.

இக்குறிப்புகளுடன் பின் தரப்பெறும் காந்தி-ஜின்னா-நேரு-வேவல் கடிதக் குறிப்புகளும் சேர்ந்து இடைக்கால சர்க்கார் நீடிக்க வழிகாட்டும். அவ்வழியில் பாகிஸ்தான், இந்துஸ்தான் மட்டுமின்றி திராவிடஸ்தான் ஆரியஸ்தான் பிரச்னைகளும் குறுக்கிடும். அவ்வனைத்தையும் ஒரே பிரகடனம் அடக்கிவிடும். அதுவே 16 நாடுகளாக இந்தியக் கூட்டரசு உருவாகச் செய்யும் பிரகடனம். பஞ்சாபி மொழியும், சிந்தியும் தனித்தனி நாடுகளாகிக் கூட்டரசில் சேரும்போது பாகிஸ்தான் பறந்துவிடும். அப்போது ஜின்னா வேவலுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதுபோல் ஒருக்கால் காங்கிரஸ் தன் வாக்குறுதியை மீறினால் திட்டத்தை சர்க்கார் நிறைவேற்றுவதற்கு ஆன வழி முறைகளை வகுப்பது என்ற பிரச்சினையே எழாது, அவர் பி. என். ராவைப் பேட்டிகாண வேண்டிய அவசியமும் ஏற்படாது. பின் 1919-ம் வருஷ இந்திய அரசியல் திட்டத்தை அவர் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு தொங்கவேண்டிய நிர்ப்பந்தமும் இல்லாமல் போய்விடும். யாருமே ஒத்துக்கொள்ளாத ஒரு திட்டத்தைக் காட்டியடக்கும் கானல் நீர் வேட்கையும் வேட்டையும் மறைந்துவிடும். ஜனமாற்றக் கொள்கையும் பிறகு தலைகாட்ட இடமிராது. வங்க பீகார் வெறியாட்டல்கள் ஊமையன் கண்ட கனவாக மறந்துபோய் உலக முன்னிலையில் ஏற்பட இருக்கும் பெரும் மானபங்கமும் நீக்கப்பெறும். இதை

இடைக்கால சர்க்கார் செய்ய, தேசிய இனங்களுக்கு சுய நிர்ணய உரிமை உடனடியாக வழங்கி அனைவரின் ஒத்துழைப்பும்பெற டிசம்பர் 9-ந் தேதி கூடும் அரசியல் நிர்ணயசபை மெம்பர்கள் அனைவரும் முயலவேண்டும். 1946-ம் வருஷத்திட்டம் இந்தியருக்காகப் பயன்படுத்தப் படும்போது 1919-ம், 1898-ம் உறங்கப்போய்விடும். இந்தியர் தலைவரை வைஸ்ராய் நியமனம் செய்வதற்குப் பதிலாக வைஸ்ராயை இந்தியர் தலைவர் நியமிக்கவோ நீக்கவோ கூடிய நிலையை ஏற்படுத்துவதே இலக்கு!

இது இப்போது இந்தியர் முன்நிற்கும் பெரும் பிரச்சினையாகும். இதை ஒவ்வொரு அ நி. மெம்பரும் நன்கு உணர்ந்து கொண்டால் இடைக்கால சர்க்கார் நீடிக்கும் இன்றேல், தக்க தருணத்தில் கலைக்கும் நாடகமாகி, அன்னியர் விரித்த வலைக்கும், உள்நாட்டு சாதி சமய உலைக்கு மாகக் கூறுபோட்டு உலகம் நகைக்கும்படி நேரும்! உண்மையான தேசபக்தியுடைய ஒவ்வொருவரும் இதை உணர்க!

ஆவன செய்ய விரைக! எழுக!
எதிரிகள் வலையைக் கிழிக்க!

எதிரிகள் ஆகாயக்கோட்டையை இடிப்பது மட்டும் போதாது. நமக்கான கற்கோட்டையையும் கட்டியாக வேண்டும். மகாத்மா சொல்லுகிறபடி, பெதிக் திட்டம் அரசியல் அறிச்சுவடியில் முதல் மூன்று எழுத்துக்களையே உடையதாக இருந்தாலும் அதை லிக் ஒரு மாதிரியாகவும்,

காங்கிரஸ் வேறு மாதிரியாகவும், வெளியிட்டோர் இன்னொரு மாதிரியாகவும் அர்த்தம் செய்து வருகின்றனர். இதைத் தீர்க்க ஒரு கோர்ட்டு வேண்டுமாம்! அதற்கு இடந்தரவே கூடாது. அ. நி. சபையே அந்த வேலையை நிறைவேற்றிவிட வேண்டும். பெரும்பான்மையோர் அநியாயமாக முடிவுசெய்து இடங்கொடுத்துவிடாமல், லீக்குக்கும், கோர்ட்டுக்கும், பிறருக்கும் பங்குவைத்து விடாமல் கலை நிலையில் இடைக்கால சர்க்கார் நிலைக்க உள்ள ஒரே வழியை வேறு பேராசைகளினால் விட்டு விலகாமல் தருணத்தில் வேண்டிய தியாக மனப்பாங்குடன் அதை நிறைவேற்றுவார்களென்றே 40 கோடி மக்களும் உலகமும் எதிர்பார்த்துள்ளோம்!

எங்களை இலவு காத்த கிளியாக்கிவிடாமல், வாய்வீச்சில் ஈடுபட்டு வாய்மையை மறந்துவிடாமல், சிறுபான்மையினர் எண்ணிக்கையை மட்டும் நினைந்து ஏமார்ந்து விடாமல், அரசியல் நுணுக்கம் அன்னியர்க்கே உண்டென எண்ணி அயர்ந்து விடாமல் சரத், பட்டாபி, எல். கே. முதலிய சிலர் வழிநின்று மொழிவாரி மாகாணத்தை உறுதி செய்க! அத்துடன் கட்சியின் கருத்தை ஜின்னா வெளிநாட்டு நிருபர்களிடம் தெரிவித்திருத்தலிலிருந்தேனும் உணர்ந்து, தக்க முறையில், மாகாணங்களைத் தொகுதி வட்டம் பிரிப்பதை ஒதுக்கி இந்து முஸ்லீம் வெறுப்பு, நீடிக்காதவாறு, காங்கிரஸ் லீக் இரண்டும் மகாத்மா கூறிய படி மறைந்து, தங்கள் சுய நலம் கடந்து

உலக வெறுப்புக்கும்
அடிமை வாழ்வுக்கும்
முற்றுப்புள்ளி வையுங்கள்.

பிற்சேர்க்கை-

I விடுதலை.

'ஒன்றாகக் காண்பதே காட்சி! புலனைந்தும்
வென்றான் தன் வீரமே வீரமாம்! என்றுந்தான்
சாவாமல் காப்பதே கல்வி! தனைப்பிறர்
ஏவாமல் உண்பதே ஊண்'—ஔவையார்.

'எழுத்தறியத்தீரும் இழிதகைமை! தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பானாகும்-மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதநூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடுபெறும்'—நாலடி.

'Sparklevimount' என்பதன் 14 எழுத்துள் 393 சொல் Atomic அணுமொழியால் எதையும் வெளியிட முடியும்?

II அ. நி. சபை.

389 பேர்கூடி முடிவு செய்யவேண்டிய
பாதுகாப்பு நிலைதொகுதி வட்டத்தால் குலையக்
கூடாது. 11 மாகாணம் 14 ஆகவேண்டும்
மொழி அடிப்படையில் ஏனைய சிக்கல்கள் அறவேண்டும்.

அ. மாகாணம்	பொது.	முஸ்லீம்	மொத்தம்
1. சென்னை	45	4	49

	2. பம்பாய்	19	2	21
	3. ஐக்ய மாகாணம்	47	8	55
	4. பீகார்	31	5	36
	5. மத்திய மாகாணம்	16	1	17
	6. ஒரிசா	9	0	9
ஆ	1. பஞ்சாப்	8 †	16	28
	2. எல்லைப்புரம்	0	3	3
	3. சிந்து	1	3	4
இ	1. வங்காளம்	27	33	60
	2. அசாம்	7	3	10
	சமஸ்தானம்	93		
	டெல்லி, ஆஜ்மீர்–மீவார், கூர்க், பலுசிஸ்தானம்	4	† பஞ்சாப்பில் சீக்கியர் 4	

III பொருள்.

மக்கள் மதித்து, ஒழுகி, பொருள்படுத்துவதே
பொருள்: செயலுக்கு முதலாவது பொழுதிடம்; கருத்
துக்கு ஏற்றது தெய்வம் முதலிய கருப்பொருள் வாழ்வுக்
குரியது உரிப் பொருள் இவை முறையே
உலகு, இறை, உயிர் என்பஉயர்ந்தோர்.

ஆக்கல், அழித்தல், அளித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐம்பெருந் தொழிலாலும், நட்டல், ஆய்தல், பிரித்தல், வேறல், நிலைத்தல் என்ற ஐம்பெருந் துணைகளாலும் மக்கள் உயர்ந்து முன் செல்வதற்குரியது செல்வம். அரசியல் வட்டம் (circle of states) அறுமுகச்சூழ் வினைகளால் அஃது உறுதிபெறும். அவை:

வேலன் முன் நண்பன், நண்பனின் நண்பன் இவர் முன் அரசியல் வட்டம் அமையும். அவனுக்கும் நண்பனுக்குமிடையில் உள்ள பகைவன் வட்டம் வேறு. இருவருக்கும் அருகிலிருக்கும் வலுவுள்ள பொதுவனுக்கும், மூவருக்கும் எட்ட இருக்கும் (**Neutral king**) நொதுமனுக்கும் வட்டங்கள் உண்டு. வேலாளன் முன் நால்வர்; பின் நால்வர், ஒழுங்காளர், எதிரி, பொதுவன், நொதுமன் வட்டங்களிலுள்ள 12 அரசர் முதல்வர். ஒவ்வொருவருக்கும் அமைச்சு, நாடு, கோட்டை, களஞ்சியம், படை ஆகிய 5 ஆட்சி உருப்புகளும் உண்டு. நட்பும் இனமும் சேரின் மாட்சி உறுப்பாம். பகை அரசுடன் வட்ட உறுப்பாம். படை, நட்பு, ஊதியங்களைவிட இன உதவி இன்றியமையாதது. பகை தவிர ஏனைய பொருந்தியவனே வெற்றியாளன். எனவே, $4 \times 3 = 12$ அரசர்; $12 \times 5 = 60$ ஆட்சியுறுப்பு; $12 \times 7 = 84$ மாட்சியுறுப்பு; $12 \times 9 = 108$ திரட்சி உறுப்பு அரசருடன்; $18 \times 4 = 72$ பூவாட்சி! $27 \times 4 = 108$ பூமாட்சி! கருத்து, படை, முயற்சிகளினால் உயர்வு, நிகர்வு, தாழ்வு கணிக்கப் பெறும். பகைவன் நிகர்வுடையனேல் வெற்றியாளன் பொதுவன் நிலை பெறும் பொருட்டு வைரிக்குச்சிறிது தற்கால வெற்றி தந்து, தன்னை நடுமையாக்கி வட்டக்கோட்டை நண்பன் நாட்டுக்கப்பால் அமைத்து உள் அரசர்களை ஆரமாக்கலாம்.

மேலாயிர முறை:— 1000000: 2-வது ஆயிரம் பொருளைச் சேர்த்தலும், காத்தலும் அமைதியையும் தொழிலையும் பொறுத்துள்ளன. வேலையின் விளைவெய்த செய்வதே

தொழில். விளைவு துய்ப்பதில் இடரின்மையே அமைதி. இரண்டுக்கும் அடிப்படை அறுமுகச்சூழ்வினை(1) அமைவு, (2) போர், (3) நொதுமல், (4) எழுச்சி, **(march)** (5) தோழமை **(ally,)** (6) இருநிலை இவைகளை சந்தி விக்ரகம், ஆசனம், யானம், சம்ஸ்ரயம், த்வைதீபாவம் என்ப வடநூலார். தேய்வு, தேக்கம், ஏற்றமாகிய நிலை மாற்றம் மக்கள் முயற்சியேல் சூழ்வினை; தெய்வ முயற்சி யேல் ஊழ்வினை. ஒழுக்கம், வெல்வோன், சூழ்ச்சி வட்டம், பூவரசு, மக்கள், தெய்வம் இவ்வேழும் தமிழர் எழுகலையால் முறையே பிறக்கும் நிலை. நிலம், விசும்பு வளி, தீ, நீர், இவை முறையே பொறை, சூழ்நிறை, வலி, தெறல், அளிகளை விளக்கும். உறுதி, தாக்கல், தனி, படை திரட்டல், காவல், அமைப்புமெனவும் சூழ்வினை ஆறும் சொல்லப் பெறலாம். இவை முறையே பொதுவாக இழிந்தோன், மிக்கோன், ஒப்போன், தக்கோன், மெலிந் தோன், ஒப்புயர்வுடையோனால் ஆளப்பெறும். நிகரூதியம் பெறும்போது உடன்பாடு; பகைவனுக்குள் நித்தகைக்கு மட்டும் பேறழிவுறவே தேய்வு. பொருத்தல், கொடுத்தல், பிரித்தல், ஒறுத்தல்களால் ஒன்றை ஒடுங்க விட வேண்டும்

அமைதி, நொதுமல், எழுதல், இருநிலை, கட்பு, போர் இவை முறையே ஒன்றைவிட ஒன்று மேலானதாகும், ஒப்போன் மிக்கோனுடன் உடன்பாடு; இடம் பொருளே வலான் நொதுமல் 3; பகை விழல் நிலைக்கின் எழுக! இடர்

பெருகின் நட்பாள்க; வறியர் அரசனை விட்டு, வாடுவோர் அரசனைத் தாக்குக! ஊதியம் தக்க அளவில் இருந்தால் வெற்றி, இன்றேல் தோல்வி. இது இரு நிலை: நல்லோர்க் குதவி, தீயோருடன் போரிடுக! நிலத்தினால் பொன்னும் நட்பும் பெறலாம். உண்மை, பண்பு, பழமை, உணர்வு, வலிமை, இணக்கம் இவை நட்புறுப்புகள். தனி விரகு (உபாயம்) 4; 2கள் 12; 3கள் 4; 4கள் 4; ஆக 24. 24 × 23 = 552 தொகுதிகள்; மொத்தம் 577 விரிவுகள் சூழ்வினை 5 தனி; 2கள் 20; 3கள் 15; 4கள் 10; 5கள் 5; இருநிலை: 30 ஆக 85. 85 × 84 = 7140 துணிநிலை எல் லாம் 1 ஆக 7226 சூழ்வினைகள் உள்ளன. ஆவன செய்துயர்க! இதுவே அரசியல் அறிச்சுவடி!

மக்கள் நிலப்பெற நிலைபெற நிறுநூல்
பொருள்நூல்: உணவும் நிலமும் பொருளாம்!

IV வேத்தியல்.

ஒன்றிலிரண்டாய்ந்து மூன்றடக்கி நான்கினால்
வென்று களங்கொண்ட வேல்வேந்தே — சென்றுலாம்
ஆழ்கடல்சூழ் வையத்துள் ஐந்துவென்று ஆறகற்றி
ஏழ்கடிந் தின்புற்றிரு! — பு. வெ. 225.

'சூரத்துணிவொடு நில்! தமிழா
சொந்த உரிமையை வெல்!'— தமிழ்க்கனல்.
தமிழ்க் கொடி உயர்த்து எங்கும்
தமிழ் வெறி பரப்பு!
அமிழ்தம் தந்தாலும்-அதற்கும்
அடிமையாகி விடேல்!'
'கற்றறிதலன்றே—நோக்கம்
கருதித் திட்டமிடல்!
ஒற்றறிதலோடு—ஒழுங்கு
தேவையளவு கொளல்!'
'ஆற்றலளவினதே—யாரும்
அடையும் இன்பளவும்!
நோற்றலளவினதே—ஆற்றல்
மாற்றரு நல்வளனும்
'ஆற்றல் பெருக்கல் ஒன்றே—இந்த
அவனி மாந்தர் துயர்
மாற்றுதல் செய்தலிலே—வல்ல
மருந்தெனக் கொள்வோம்!'
இன்பதுன்பம் பயன்கள் தப்பும்
எற்றிட வன்மையில்லா
புன்குழுவின் மாக்கள்—எட்ட
புன்முறுவல் புரிவோம்!'
அச்சுறுத்தார் வுணர் வோ—டதை
ஆளவா அற்றுள்வோம்!

நிறை.

'மக்கள் தொகையும் வளர்ச்சியும்
வாழ்நிலமாம் பொருளின்நான்கும்—உயர்
தக்கபடைதரும் தாழ்விலரசியல்
தாங்கும் எடையினவே.'

சூழ் நிலை.

'சுற்றுச்சார் பெல்லாமே சூழ்ந்து பயன்செய்யும்
சூழ்ச்சியின் மாண்புணர்வோம் !—நாம்
செற்றாரென அயலார் அயலாரையோ
சேர்ந்த உறவென்போம் !'

பூதம்.

செயல் விலை காகலை செங்கோலிடை மார்தோள்
செம்மூக்கு மூளைமுறை—நாம்
செயல் நில நீமெரி செவ்வளியாம் வீசும்
பொவ்வ உயர்ந்திடுவோம் !

தொழில் !

பல்வகை இயந்திரம் கூட்டுவோம்... தமிழ்
பாரின் முதன்மொழி நாட்டுவோம் !
பல்வகைத் தொழில்களும் மின்வலி—கொண்டு
பாங்குடன் பல்பொருளீட்டுவோம் !'

மெச்சுறு போர் சூர்—உள்ளம்
மேவுறு நாடி யிணேம்!!
புலன்கள் நரம்புகளும்—பெறும்
போரளவே பெருகும்!
வலங்கொள் விடுதலேயே—உலகு
வாழ்வுறு மாணெறியாம்!'—தமிழரசுப்பாடல்.

தூது!

உலகத்தின் பற்பல நாட்டுக்கும்—நம்
உயர்தமிழ்த் தூதரைப் போக்குவோம்'
அலகில் மதிப்புடன் தூதற்கும்—அவை
ஆர்வேங்கு பணிவதை நோக்குவோம்!'

நிலே!

தமிழ்மொழி தமிழிசை தமிழ்க்கலேயாமிவை
தரணியில் வளர்ப்பதே நம் நிலேயாம்!
தமிழ் நாட்டின் வறுமையைப் போக்குதற்கே
—தொழில்
தகுதிட்டம் வகுநிறை வேற்றுதற்கே!

வரை.

தமிழர் வெளிநாட்டில் தயங்குதல் நீங்க-நாம்
தமிழகத்தே பிறர் ஆட்சி பொரும்!
தமிழகத்துண்டுகள் ஒன்றிடவே—நாம்
தமிழரசைப் பிறர் மதிக்க வைப்போம்!'

முத்தமிழ்.

புவியில் பாய்ந்திடுவோம்!—புலிபோல்
புவன வட்டம் எல்லாம்
நவில்வில் அம்பைப்போல்—பறந்து
வானிலமும் காப்போம்!
மீனென நீர்மூழ்கி—கப்பல்
மிகுங்கடற் படையால்
தேனெனப்பேசும் கொள்ளைக்கூட்டம்
தெருட்டி ஆண்டிடுவோம்!

கொடி!

‘கொடியைக் காத்திடவா!—தமிழா
கூசி நில்லா தோடிவா!
இடியை யொத்த பகை நெருங்கினும்
எட்டி உதைத்து விடு!’—தமிழரசுப்பாடல்.

வெற்றி!

தமிழ் எங்கள் அயர்வுக்கு வாள்!—இன்பத்
தமிழ் எங்கள் உயர்வுக்கு வானுயர் தோள்!
தமிழ் எங்கள் வெற்றிக்குத் தூண்!—உயர்
தமிழ் எங்கள் வாழ்க்கையில் ஊக்கிடும் நாண்!’

எழுமின்! விழிமின்! கருதிய காரியம் கைகூடும்வரை உழைமின்!

V கடிதம்.

7—10—46ல் ஜின்னு எழுதிய கடிதம் 9 கோரிக்கைகளை வெளியிடுகிறது. போட்டிக் கோரிக்கைகள் :

1. நிர்வாக கவுன்சிலில் 14 மெம்பர்கள் இருத்தல்.
2. ஒதுக்கப்பட்ட வகுப்பினரைச் சேர்த்தல்.
3. காங்கிரஸ் தேசிய முஸ்லீமை சேர்க்கப்படாது.
4. பெரும்பான்மையோர் பாதுகாப்பும் ஆட்சேபமும்
5. உபதலைவர் பதவி மாற்றிக் கொடல். (Security)
6. சீக்கியர், கிறிஸ்தவர், பார்ஸி தேர்தலில் லீக் கலக்கப்படல் வேண்டும் என்பது.
7. இலாகாக்கள் தகுந்தபடி பிரித்துக்கொள்ளல்.
8. காங்கிரஸ், லீக் இவைகளின் உடன்பாடில்லாமல் மாற்றுமை (உலக கமிட்டி காப்பி).
9. சமரஸம் நன்கேற்படும்வரை நீண்டகால திட்டம் ஒத்திவைக்க வேண்டுமென்பது.

இவற்றைக் கூர்ந்து நோக்கினுல் இந்தியாவை இரண்டு துண்டாக்க எல்லா வகையிலும் முயலும் ஜின்னுவுக்குத் தக்க பதில் அ. நி. சபை கொடுக்கவேண்டுமானுல், சமயவெறியிலும், அந்நியர் சுரண்டலிலுமிருந்து இந்தியா விடுதலைபெற வேண்டுமானுல் உடனே தரத்தக்க மொழி வாரி மாகாண மருந்தே சிறந்தது.

இம்மூவா மருந்தை உண்டு
இந்தியரும் அமரராகும்
காலம் தூர இல்லை.

VI கடித நாடகம்.

காந்தி-காய்தே அஜாம் அவர்களே! தாங்கள் சமாதான மாக விரும்பினால் நான் எதிலும் கையெழுத்திட தயார். முஸ்லீம்லீகே முஸ்லீம்களுக்கு ஏகப்பிரதிநிதி. போதுமா?

ஜின்னா—இது போதும்! வணக்கம்! வருகிறேன்!

வேவல்—பலே! நல்லவேலை செய்தீர்! இனிமேல் நம்ம ராஜ்யம்தான். ராமராஜ்யத்திற்கு அஞ்சோம். இத் திட்டமே கோட்டை திறக்கிற திறவுகோல். மகாத்மா சொல்லுக்கு மறுசொல்லேது ?

நேரு—ஒருக்காலும் ஒத்துக்கொள்ள முடியாது. உங் களிடை ஏற்பட்ட ஒப்பந்தம் எங்களை எப்படிக் கட்டுப் படுத்தும் ? மகாத்மா எங்களைக் கேட்கவில்லை.

ஜின்னா—பண்டிதரே, இந்த ஒப்பந்தத்தின் அடிப் படையிலேதான் நாம் சந்தித்தது ; இப்போது வேண்டா மென்றால் அதற்கு என்ன அர்த்தம்?

நேரு—இது ஏது தர்ம சங்கடமாக இருக்கிறதே! சரி, சகாக்கள் சொல்கிறபடி ஒத்துக்கொள்கிறோம். தேர்தலில் லீக் மெஜாரிட்டி தெரிந்தது தானே!

வேவல்—இனி, நேரு அசம்பிளித் தலைவர். நிஷ்டார் தான் கவுன்சில் தலைவர்.

(திரை விழுகிறது)

டம்ம்......இது என்ன வங்காள வெடியா ?

கும்ம்... ஓ, பீகார் வெடி வேறு ? எல்லாரும் அங்கே ஓடுகின்றனர்.

லண்டனிலிருந்து அழைப்பு வருகிறது.

பிரார்த்தனை :

1. சர்ச்சில்—ஏக பராபரனே !
ஏகாதிபத்திய காவலனே !

2. நேதாஜி—சந்திரசேகரனே !
இந்தியர் காவலனே !

ஜெய் இந்த் !

தமிழ் ராயல் காலேஜ்

(உலகக் கலைக்கழகம்.)

ஷெனய் நகர், மதுரை.

பாடம் : ஆறே மாதங்களில் ஆங்கில அறிவு, S. S. L. C., Matric, Inter Entrance, Inter, B. A., B. Sc., B. O. L., பண்டிதம், புலவர், வித்வான், மூன்றே மாதங்களில் முத்தமிழ், அணுத்தமிழ், Atomic English, calculus, theory of chance. error, estimation, short-hand, cross words and numbers, verse, story,-writing, journalism and oratory.

Tamils' Congress (தமிழர் மகாசபை.)

Rules : Its object is to protect and promote all Tamil associations by providing them with experts in research, drama, dance, music, literature, picture and sculpture. Its management is vested with the founder-chief Pandit **M. Ramalingam** and his assistants elected by the members and endorsed by him for maintaining a line of experts who expand experience for and by it.

பண்டித முரா புத்தகங்கள் :

1.	அன்புக் கொடி (Flag of Love)	0—2—0
2.	என் போர் (My war)	0—4—0
3.	தமிழரசுப் பாடல் (Songs of Tamil Kingdom)	0—5—0
4.	அணுமொழி (Atomic language)	0—3—0
5.	தமிழ் நாட்டு வட எல்லை எது ?	0—1—0
6.	இடைக்கால சர்க்கார் நீடிக்குமா ?	0—6—0
7.	மெய்கண்ட நூல்	0—1—0

விரைவில் :

1.	இளங்கோ (The Prince)	0—8—0
2.	தமிழர் எழுகலை (7 Arts)	0—10—0
3.	சாணக்கியம்—கௌடில்யர்	10—0—0
4.	மூலதனம்—மார்க்ஸ்	10—0—0
5.	பிரின்சிபியா—நியூட்டன்	15—0—0
6.	ஈயூக்லிட்—வில் அளவு	20—0—0
7.	[illegible] கணிதம்	5—0—0

வெங்கடேஸ்வர் பிரஸ், மதுரை:—46.

இந்தி மகாத்மியம்!

இந்தி எதற்காக? — கிளியே!
இந்தி எதற்காக? (இ)

செந்தமிழ் நாட்டினில்
வெஞ் சிறை காட்டிய (இ)

இந்தியும் உருதுவும் ஒன்றலை என்றதும்
இந்துஸ்தானி என வேட்டம்புனைந்ததால் (இ)

ஆளுவோர் மொழிஎன ஆங்கிலம் கற்றாய்!
அடிமைத் தளைக் கொருஆணிவேர் தந்தாய்!
மீளுந்த ருணத்தில் இன்னொருகட்டேன்?
மினுக்கி உனைக்கொளும் மெல்லியல் தீண்டேல்

— பண்டித முரா. (இ)

1-1-'47 முதல் இந்தி கட்டாய வசதிபெறுமாம்
ஆசிரியர் கட்டாயம்! மாணவர்? —இதுவும்
மில்-மல்லும் ஹரிஜன் எடுப்பார் கைப்பிள்ளையாம்
நிலையும்மாறி விடுதலை உயர் வுறவேண்டும்.

O' Almighty, give a resting place
To the sad relics of the Tamilan race
A seat secure, a region of their own,
A lasting empire, and a happier town!

Note:— Tamils, be it yours to bear dominions and impose peace, to spare the overthrown and overthrow the mighty.

அன்னையின் பந்தம் நீக்கிக்காக்க
உண்மைத் தமிழா! எழுவாயே!
வீரமுடன்! வீரமுடன்! வீரமுடன் நீ
வெற்றிக்கொடியை விண்ணுயரவே நடுவாயே!

மண்ணோர் புகழும் மதிமிகு தமிழா!
திண்ணம் தமிழர் நல்வாழ்வை
மாநிலமீதே மாண்புடன் காண
முரசே கொட்டி எழுவாயே! (அ)

செந்தமிழ் மொழியே சீர்வளமாக
சிந்தை கொண்டே வருவாயே!
இன்னலைப் போக்கி இன்பமே ஆக்க
எழுவாய் தருணம் ஏற்றமுடன் (அ)

—திரு. து. வரதன்.

தமிழ் உயர்க: நீடூழிக் கணிதம்.

மதி முதல் நாள் அறி மல்குயர் ஆண்டமை : எழுகலை

1, 10	: தமிழ்உயர்க	: 41	: உ	— ஓரை
2, 3, 11	: உயர்கதமிழ்	: 42	: ழ	— கூத்து
4, 7	: கதமிழ்உயர்	: 43	: மி	— நடனம்
5	: மிழ்உயர்கத	: 44	: த	— இசை
6	: பர்கதமிழ்உ	: 45	: ர்	— இலக்கியம்
8	: ழ்உயர்கதமி	: 46	: ய	— ஓவியம்
9, 12,	: ர்கதமிழ்உய	: 47	: [illegible]	— வடிவம்

❋ : சவெணிபுசெதிஞா : 1-1-47 நாள் ?
12-ல் 'ய'-ன் கீழ் ஞா ஃ புதன்